1990 மே 11]

திரு. எம். முத்தையன்: குணப்படுத்தும் அருமையான சித்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் சித்த வைத்திய மருத்துவக் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் போட்டு, மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் சித்த வைத்தியக் கல்லூரிகள் 2 நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கிற ஆசிரியர்கள் சித்த வைத்தியத்திலே பயிற்சி பெற்று, பட்டம் பெற்றவர்கள்தான். பட்டம் பெற்று, அதற்குரிய தகுதியைப் பெற்றவர்களைத்தான் அதற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காண்ட்ராக்ட் முறையை ரத்து செய்தல்.

*2339—திரு. கே. ரமணி:
மாண்புமிகு செய்தி மற்றும்தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு மின் வாரியம், நெய்வேலி அனல் மின் திட்டம் ஆகிய நிறுவனங்களில் காண்ட்ராக்ட் முறையை ரத்து செய்வது பற்றி தொழிலாளர் நல இலாக்கா சார்பில் ஒரு குழு ஆய்வு செய்தது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தெரியும்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம், அதன் அனல் மின் நிலையங்கள் மற்றும் நெய்வேலி அனல் மின் நிலையம் ஆகியவற்றில் நிலவும் ஒப்பந்தத் தொழிலாளர் முறை பற்றி ஆராய்வதற்காக 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் குழு ஒன்றை அரசு அமைத்தது. அக்குழு 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் அதன் பல்வேறு அனல் மின் நிலையங்கள் பற்றி குழுவால் அளிக்கப்பட்ட அறிக்கையினை ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழு ஆராய்ந்து தனது பரிந்துரையினை அரசுக்கு அளித்தது. அப்பரிந்துரையின் அடிப்படையில் சுமார் 20 பணிகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை நீக்குவதற்கான செயற் குறிப்பினை அரசு பரிசீலித்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 மே 11

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குழுவின் முடிவுகளை அரசு ஆய்வு செய்து வருவதாக, பரிசீலித்து வருவதாக அமைச்சரவர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். இது எப்போது நடைமுறைப்படுத்தப்படும்? குறிப்பாக மின்சார வாரியத்தில் 15,000 முதல் 20,000 கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் நிரந்தரமாக அந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அங்கே 25,000-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருக்கின்றன. எனவே நிரந்தரமாக அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் அந்தத் தொழிலாளர்களை காலி இடங்களில் நிரப்ப அரசு மின்சார வாரியத்தை வலியுறுத்துமா, அதை நடைமுறைப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. நிர்வாகத்திலே வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்திலே போடப்பட்டு, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அதிகமான விவரங்களைச் சபையில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம்.

*4410—திரு. கோ. வீரையன்:
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அமல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதற்காக செய்யப்பட்டு இருக்கும் நிர்வாக ஏற்பாடு என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இச்சட்டம் தொழிலாளர் ஆணையரால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் துறையின் தொழிலாளர் ஆய்வாளர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள், தொழிலாளர் உதவி ஆய்வர்கள் போன்ற அலுவலர்கள் இச்சட்ட அமுலாக்கத்தினைக் கண்காணித்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9—55 மணி

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் இந்த கட்டுமானப் பணியாளர்களுக்கு குறைந்